# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 144 · வெள்ளிக்கிழமை Friday · 21.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# தொகுதி மறுவரையால் எந்த மாநில பிரதிநிதித்துவமும் பாதிக்கப்பட கூடாது

## தென் மண்டல முதல்வர்கள் மாநாட்டில் முதலமைச்சர் விஜய் பேச்சு



சென்னை: தொகுதி மறுவரையால் எந்த மாநில பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படக்கூடாது என தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசியதமிழ்நாடு முதலமைச்சர் விஜய், போதைப்பொருள் புழக்கத்தை ஒழிப்பது, நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு, நதி நீர் பிரச்சனைகள் குறித்து கருத்துகளை முன்வைத்துள்ளார்.

31வது தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாடு சென்னையை அடுத்த கோவளத்திலுள்ள ஒருதனியார் நட்சத்திர விடுதியில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமை வகிக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் துணை தலைவராக பொறுப்பேற்றிருக்கிறார்.

இந்த மாநாட்டில் தென் மாநிலங்களுக்கு இடையேயான விவகாரங்கள் குறித்தும், நட்புறவை வலுப்படுத்துதல் குறித்தும், பிராந்திய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் குறித்தும், அவற்றை எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுத்துவது என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இம்மாநாட்டில் உரையாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், போதைப்பொருள்பயன்பாடு, மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் பிரச்சினை மற்றும் நீட் தேர்வு ஆகியவற்றை குறித்த முக்கிய கருத்துகளை முன்வை த்தார். இது தொடர்பாக அவர் பேசுகையில், "இளைஞர்களிடையே போதைப்பொருள், மனோதத்துவ மருந்துகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவது கவலையளிக்கிறது. இதுபோன்றபொருட்கள் சட்டவிரோதமாக இணையவழியில் விற்பனைசெய்வதைகட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 'போதைப்பொருள் இல்லாத தென்னிந்தியாவை' உருவாக்கும் கனவை நனவாக்க, தென் மாநிலங்களுக்கு இடையேயான உளவு தகவல்களை பகிர்வதன் மூலம் போதைப்பொருள் கடத்தல்களை கட்டுப்படுத்த முடியும்.

மேலும், டிஜிட்டல் மருந்துச்சீட்டு மூலமாக போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருக்கிறது. இதனை சரிசெய்ய மத்திய அரசின் கடுமையான நடவடிக்கை தேவை என்றும் வலியுறுத்தினார். மாநிலங்களுக்கிடையேயான நீர் பிரச்சினைகளை சரிசெய்ய, நீர்வள ஆதாரங்களை பாதுகாப்பதோடு, உச்ச நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். குறிப்பாக, காவிரி மேலாண்மை ஆணைய முடிவுகளை உரிய நேரத்தில் செயல்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை பாதுகாப்பாக 152 அடிக்கு உயர்த்துவதற்கு கேரள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டின் நதிநீர் உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

நீட் நுழைவுத் தேர்வால் கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே தமிழ்நாட்டிற்கு 12ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமேமருத்துவபடிப்புகளுக்கான இடத்தை நிரப்ப வேண்டும், நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்குவிலக்குஅளிக்க வேண்டும்.

மேலும் தமிழ்நாட்டிற்குமத்தியஅரசு நியாயமான நிதி பகிர்வு அளிக்க வேண்டும். ஜிஎஸ்டியை தீர்மானிக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

அதுமட்டுமல்லாமல், கடல்வழி போக்குவரத்து, மீன்பிடித்தலில் அண்டை மாநிலங்களுடன் இணைந்து செயல்படுவோம் என்று உறுதியளித்த முதலமைச்சர் விஜய், கடல்சார் பொருளாதாரத்துக்கு புதிய திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், கர்நாடகாவின் பொம்மசந்திரா - ஓசூர் வரையிலான மெட்ரோ ரயில் இணைப்பை நீட்டிக்கும் திட்டம் பயனுள்ளதாக இருக்கும் எனவும், நீல பொருளாதாரத்தை மேம்படுத்த அண்டை மாநிலங்களோடு இணைந்து செயல்பட தமிழகம் தயார் எனவும் உறுதியளித்தார்.

மேலும், ஒருங்கிணைந்து செயல்பட்டால் துறைமுகம், சரக்கு போக்குவரத்து, நீர்வளம் மேம்படும் என்றும், தொகுதி மறுவரையால் எந்த மாநில பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

# சமூக வலைதளங்களில் கவனம் செலுத்த மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை



புதுடெல்லி: மத்திய அமைச்சர்கள் அனைவரும் சமூக வலைதளங்களில் கவனம் செலுத்த பிரதமர் நரேந்திர மோடி தனிப்பட்ட முறையில் அறிவுரை வழங்கியுள்ளார்.

மேடை மற்றும் ஒலிபெருக்கி காலத்தைக் கடந்து, இப்போது இணைய ஊடகத் தளங்கள் மூலமாகவே அரசியல் நிலை தீர்மானிக்கப்படுகின்றன. இதனை பிரதமர் மோடி அரசு தீவிரமாகக் கருதுவதாகத் தெரிகிறது. இவரது கருத்துப்படி, கட்சி, அரசு மற்றும் இளைஞர்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு போன்றவற்றை வலுவாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகிவிட்டது.

இதற்கு அனைத்து அமைச்சர்களும் முகநூல், இன்ஸ்டாகிராம், லிங்க்ட் இன் மற்றும் எக்ஸ் ஆகிய நான்கு முக்கிய சமூக வலைதளங்களில் பங்கெடுப்பது அவசியம். இவற்றில் அமைச்சர்களின் செயல்பாடுகளை அதிகரிக்க வேண்டும் என்பதில் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

இவற்றை கண்காணிக்க வேண்டி மத்திய அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்த அறிக்கையை பிரதமரின் அலுவலகம் தயாரித்துள்ளது. நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அந்த அறிக்கை அமைச்சர்களிடம் மூடிய உறையில் வழங்கப்பட்டது. அதில் அமைச்சர்களின் செயல்பாட்டுத் தரவரிசைகளும் இடம்பெற்றிருந்தன. அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒரு உறைவழங்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மே 1 முதல் ஆகஸ்ட் 15 வரையிலான காலகட்டத்தில், அந்த நான்கு இணைய ஊடகத் தளங்களில் அமைச்சர்களின் பதிவுகள், பல்வேறு விவகாரங்கள் குறித்த அவர்களின் நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகள் உள்ளிட்ட தகவல்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக, அப்பதிவுகளுக்குக்கிடைத்தபொதுமக்களின் எதிர்வினைகளும் இந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்தன. ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் சக அமைச்சர்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஒப்பிடுகையில் எந்த நிலையில் உள்ளனர் என்பதைக் காட்டும் ஒப்பீட்டுத் தகவல்களும் அந்த அறிக்கையில் இருந்தன.

இந்த அறிக்கையைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்திய பிரதமர் மோடி, நவீன தகவல் தொடர்பு ஊடகங்களின் முக்கியத்துவத்தை அமைச்சர்களுக்கு மீண்டும் விளக்கினார். இன்றைய இளைஞர்கள் மிகுந்த விழிப்புண ர்வுடன் உள்ளனர் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இளைஞர்கள் சமூக இணைய ஊடகங்களில் தொடர்ந்து இயங்கி வருகின்றனர். அங்கிருந்து பரப்பப்படும் தகவல்கள் அவர்களைச் சென்றடைகின்றன. சில தவறான தகவல்கள் அவர்களைத் திசை திருப்பக்கூடும் என்பதால், அரசாங்கம் விழிப்புடன் இருக்கவும் பிரதமர் எச்சரித்துள்ளார். இணைய ஊடகங்களில் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக அமைச்சர்கள் முன்னெடுப்புகளை மேற்கொண்டுவிவாதங்களில் பங்கேற்கவும் வலியுறுத்தி உள்ளார்.

அமைச்சர்கள் அதிகாரப்பூர்வமான பொறுப்பில் உள்ளவர்கள் என்பதால், அவர்கள் அளிக்கும் தகவல்களுக்கு அதிக நம்பகத்தன்மை இருக்கும் என்பது பிரதமரின் நம்பிக்கை. குறிப்பாக, இன்ஸ்டாகிராமில் அதிக ஈடுபாட்டை காட்டுமாறு பிரதமர் அமைச்சர்களுக்குக் அறிவுறுத்தியதாகத் தெரிகிறது. அவரே அந்தத் தளத்தில் 'ஜென்ஸீ' பிரிவினருடன் உரையாடியதன் மூலம் இந்தச் செய்தியை ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளார்.

# தண்ணீர் நம்மை ஒன்று சேர்க்க வேண்டும்; பிரித்து விடக்கூடாது; முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் பேச்சு



மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் மத்திய மந்திரி அமித்ஷா தலைமையில் 31-வது தென் மாநில முதல்-மந்திரிகள் மாநாடு சென்னை மாமல்லபுரத்தைஅடுத்துள்ள கோவளத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் முதல்-அமை ச்சர் விஜய், கர்நாடக முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் அருகே அமர்ந்துள்ளனர். மேலும், ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு, தெலுங்கானா துணை முதல்-மந்திரி மல்லுப்பட்டிவிக்ரமர்கா, கேரளம் முதல்-மந்திரி சதீசன், புதுச்சேரி மாநில கவர்னர் கைலாஷ்நாதன், அந்தமான்-நிக்கோபர் தீவுகள் துணை நிலை கவர்னர், லட்சத்தீவு அதிகாரிகள் மற்றும் அந்தந்த மாநில உயர்அ திகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

தண்ணீர் நம்மை ஒன்று சேர்க்க வேண்டும்; பிரித்து விடக்கூடாது. நதி நீர் பங்கீடு என்ற நிலையில் இருந்து நதிநீர் ஒத்துழைப்பு என்ற நிலைக்கு நகர வேண்டிய நேரம் இது. ஒத்துழைப்பு அடிப்படையில் நதிநீர் பிரச்சினைகளை அணுக வேண்டும். ஆறுகளுக்கு அரசியல் எல்லை தெரியாது. கர்நாடகா எப்போதும் பிற மாநிலங்களின் உரிமைகளை மதித்து செயல்படுகிறது.

கர்நாடகாவின் சட்டப்பூர்வ நீர்ப்பங்கை மதிக்க வேண்டும். நாங்கள் புகார் கூற வரவில்லை; இந்தியாவின் வளர்ச்சியில் பங்குதாரர்களாக வந்துள்ளோம். எங்களுக்குத் தேவை நியாயம் மட்டுமே. சமத்துவம், வெளிப்படைத் தன்மை, ஒத்துழைப்பு கர்நாடகாவின் கொள்கைகள். மேகதாது அணை கர்நாடகாவிற்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கும் முக்கிய திட்டம். உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள். ஒவ்வொரு துளிநீரும் தமிழ்நாடு, புதுச்சேரி விவசாயிகளுக்கும் உதவும்

. இவ்வாறு அவர் கூறினார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### கோவை சின்னியம்பாளையம் பகுதியில்

# நெக்ஸ்ட் ஃபேஸ் ஆஃப் தமிழ்நாடு 2026 எனும் தலைப்பில் நடைபெற்ற தகுதிச் சுற்றுப் போட்டி

## பல்வேறு மாநிலங்களை சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டு அசத்தினர்




நெக்ஸ்ட் ஃபேஸ்ஸ்கின் கேர் பை நேச்சுரல்ஸ் வழங்கும் ஐரிஸ் ஃபேஸ் ஆஃப் தமிழ்நாடு 2026 எனும் போட்டியின் தகுதிச்சுற்று கோவை அவினாசி சாலையில் அருகே உள்ள ட்ரன்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

மாநிலத்தின் பல்வேறு கல்லூரி, இருந்து மாணவ, மாணவிகள், பணிபுரியும் பெண்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே, மதுரை, திருச்சி மற்றும் சென்னையில் வெற்றிகரமாக தகுதிச்சுற்றுகள் முடிவடைந்துள்ளன. இந்த நகரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள், மாநில அளவிலான இறுதிப் போட்டியில் பங்கேற்பார்கள். கோவையில் நடைபெறும் தகுதிச் சுற்றில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களும், அவர்களுடன் சென்னையில் நடைபெறும் இறுதிப் போட்டியில் இணைந்து, மாநிலப் பட்டத்திற்காகப் போட்டியிடுவார்கள்.

போட்டியில் பெண்கள் பிரிவுகளில் பிரவீனா பெண்களுக்கான பிரிவில் முதலிடமும், தேஜஸ்ஸ்ரீ, வன்சிகா ஆகியோர் 2,3 வது பிடித்தனர். திருமதி பேஸ் ஆப் கோயமுத்தூரில் அஸ்வினி சுசுந்தர் சுந்தர்ராஜ் வெற்றி பெற்றார்.

ஆண்களுக்கான பிரிவில் சரண் முதலிடமும், சுகைல் அஸ்லம் 2ம் இடமும் பெற்றனர். மாநில இறுதிப் போட்டி சென்னை ஜி.ஆர்.டி ராடிசன் ஓட்டலில் செப்டம்பர் 5ம் தேதி நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஐரிஸ் ஈவென்ட்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி லதா கிருஷ்ணா செய்திருந்தார். நிகழ்ச்சியில் நடுவர்களாக பேஸ் ஆப் கோயமுத்தூர் முன்னாள் வெற்றியாளர்கள் ஐரா, தனுஷ், மதுரை வெற்றியாளர் நிதின், நேச்சுரல்ஸ் பயிற்சியாளர் கோகிலா, டாக்டர் செந்தில் பிரியா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வீராணம், முன்னாள் மாணவர்கள் குழு சார்பாக ஐம்பெரும் நிகழ்ச்சி



தென்காசி மாவட்டம் வீராணம், முஸ்லிம் கல்வி குழுமத்தில் பயின்ற முன்னாள் மாணவர்கள் குழு சார்பாக ஐம்பெரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எல்.கே.ஜி & யு.கே.ஜி வகுப்புகளுக்கு புதிய 32" எல்.இ.டி கிட் இரண்டு, 10 செட் பெஞ்ச், டெஸ்க், மூன்று புதிய மின் விசிறி மற்றும் எலக்ட்ரிக்கல் வேலை, 2025 – 2026 ம் ஆண்டில் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற, 450 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற, பாடத்தில் 100 க்கு 100 மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது.

பள்ளிக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

முன்னாள் மாணவர்கள் குழு அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. மாணாக்கர்களுக்கான நூலகம் திறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் முன்னாள் மாணாக்கர்கள், ஜமாஅத்தார்கள், ஜமாஅத் கமிட்டி உறுப்பினர்கள், கல்விக் கமிட்டி உறுப்பினர்கள், பள்ளியின் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பெருமக்கள், பள்ளி மாணவ-மாணவிகள், ஊர் பொதுமக்கள் என 150 க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நூலகத்திற்காக அதிகமான நபர்கள் பல நூல்களை வழங்கியும், நூலகத்தை அனைவரும் பார்வையிட்டும் மகிழ்ந்தனர்.



உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம், மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், 19.8.26 சிவகிரி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் மாவட்ட சமூக நல அலுவலகம் சார்பில் குழந்தை திருமணம் மற்றும் இளம் வயது கர்ப்பம் குறித்த விழிப்புணர்வு தெரு நாடகம் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# போக்சோ வழக்கில் மத போதகருக்கு மரண தண்டனை



திருநெல்வேலி: போக்சோ வழக்கில் கிறிஸ்தவ மத போதகருக்கு மரண தண்டனை விதித்து திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தேவர்குளம் அருகே உள்ள மேல இலந்தை குளம் பகுதியில் நான்கு சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது தொடர்பாக கங்கைகொண்டான் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அதே பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ மத போதகரான ஆபிரகாம் (50) சிறுமிகளிடம் அத்துமீறியது தெரியவந்தது.

உடனடியாக மத போதகர் ஆபிரகாமை போக்சோ வழக்கில் போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணை, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் தீர்ப்பை வாசித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த மத போதகர் ஆபிரகாமுக்கு மரணதண்டனைவிதித்து உத்தரவிட்டார்.



### சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரர் ஒண்டிவீரனின் நினைவுதினத்தை முன்னிட்டு

# தூத்துக்குடி கலைஞர் அரங்கில் வைக்கப்பட்டிருந்த ஒண்டிவீரனின் திருவுருவ படத்திற்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்

முதல் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் அவரின் திரு உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அரங்கில் வைக்கப்பட்டிருந்த மாவீரர் ஒண்டிவீரனின் திரு உருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் மற்றும் ஏராளமான திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் இதைத்தொடர்ந்து திமுக ஆதிதிராவிடர் அணி சார்பாக பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் அதிகமதிப்பெண் எடுத்த மாணவமாணவிகளுக்கு கேடயம் மற்றும் ரொக்க பரிசுகளையும் முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், ஒண்டிவீரன் கலை பண்பாட்டு மைய நிர்வாகிகள் தலைவா முருகேசன், செயலாளர் சங்கரன்,

பொருளாளர் இராமசந்திரன், மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாவட்ட துணைச்செயலாளா ராஜ்மோகன் செல்வின், துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாநகராட்சி மண்டல தலைவர் பாலகுருசாமி பகுதி செயலாளர்கள் ரவீந்திரன் சுரேஷ்குமார் நிர்மல்ராஜ் ஆதிதிராவிடர் அணி தலைவர் முருகேசன் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கவிதா தேவி உள்ளிட்ட ஏராளமானவர்கள் மற்றும் திமுகவினர் திரளாகக் கலந்து கொண்டனர்.

# நல்லூர் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் 80வது சுதந்திர தின விழா

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நல்லூர் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் இந்தியாவின் 80-வது சுதந்திர தின விழா கவிதா உறுதிமொழி வாசிக்க, அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

இளையோர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் மாவட்ட அளவில் நடைமாவட்டத் தலைவர் டியூக் துரைராஜ், ஆலங்குளம் இளைஞர் காங்கிரஸ் தலைவர் சாகர் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. கல்லூரி பாடகர் குழுவினர் இறைவாழ்த்து பாடினர்.

தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மகாராணி எலிசபெத்து வேதபாடம் வாசித்தார். கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் ஜேசு ஜெகன் தலைமையில் நடைபெற்ற விழாவில், கல்லூரி முதல்வர் முனைவர் வில்சன் முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் இராபர்ட் புரூஸ் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரையாற்றினார்.

ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் பெற்ற போட்டிகளில் பங்கேற்ற கணிதவியல் துறை முதுகலை மாணவிகள் மொலின், அனுஷியா, விஜயராணி ஆகியோருக்கு சிறப்பு விருந்தினர் சான்றிதழ்களை வழங்கினார்.

விழாவில் மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப்பள்ளி தாளாளர் வழக்கறிஞர் ஆல்வின் பாலன், நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் சிம்சன், தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பேச்சாளர் ஆலடி சங்கரையா, திருநெல்வேலி மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் வழக்கறிஞர் இராமேஸ்வரன், ஆலங்குளம் வட்டார காங்கிரஸ் தலைவர் ரூபன் தேவதாஸ், மாறாந்தை ஒன்றிய கவுன்சிலர் கலா கண்ணன், காங்கிரஸ் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு விழாவின் நிறைவில் மாணவ, மாணவியரின் தேசப்பற்றை வெளிப்படுத்தும் வகையில் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சிகளை முதுகலை ஆங்கிலத்துறை முதலாமாண்டு மாணவி தீபிகா தொகுத்து வழங்கினார். கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர் ஜூலியன்ஸ் ராஜாசிங் விழா ஏற்பாடுகளை செய்து, நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது. தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

# கடையநல்லூர் இக்பால் நகர் தவ்ஹீத் ஜமாஅத், தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு (NTF) புதிய நிர்வாகம் தேர்வு செய்வதற்கு செயற்குழு கூட்டம்



புதிய நிர்வாகம் தேர்வு செய்வதற்கு செயற்குழு கூட்டம் 16 - 08-2026 ஞாயிற்றுக்கிழமை லுஹர் தொழுகைக்கு பிறகு தலைவர் நெய்னார் சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகம் தேர்தெடுக்கப்பட்டது.. தலைவர்- நெய்னார் சாகுல் ஹமீது, செயலாளர்- ஜமீன் அஹ்மது, பொருளாளர்- மஞ்சி துராப்ஷா, ரவ்ளத்துஸ் ஸாலிஹாத் பெண்கள் இஸ்லாமியக் கல்லூரி முதல்வர்- முஹம்மது மைதீன் ரியாஜி . ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணை தலைவர்கள் -அல்லிமூப்பன் அஜீஸ், செயிப்பு நவாஸ் கான். துணை செயலாளர்கள்- அச்சுகட்டி சாகுல், மூப்பன் சாகுல் ஹமீது .

மற்றும் கமிட்டி உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த கூட்டத்தில் கலந்தரி இப்ராஹீம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பொது மக்கள் நலனில் அக்கறையுடன் செயல்படுவது, மக்தப் மதரஸா, முதியோர் மதரஸா, மற்றும் ஆலிமா மதரஸா , பெண்களுக்காகவே நடத்தப்படும் பெண்கள் பயான், ஆண்கள் பயான் தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு NTF தலைமையின் சார்பில் நடக்கும் மாதாந்திர கேள்வி, பதில் வினாக்களின் பரிசளிப்பு நிகழ்ச்சி மற்றும் மருத்துவ முகாம், ஏழைகளுக்கு உதவுதல் மற்றும் பிற நல்ல காரியங்கள் அனைத்தும் இன்னும் வீரியமுடன் கொண்டு செல்வது பற்றியும் விவாதிக்கப்பட்டது . பிறகு துஆ வுடன் கூட்டம் நிறைவு பெற்றது."



திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் மதிப்புமிகு க.வை.ராஜ்குமார் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலகூட்டமைப்பு சார்பில் நிறுவனத்தலைவா் சா.அருணன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பட்டு வேட்டி அணிவித்து புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்து மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுல் குறித்து எடுத்துரைத்தார்.

# தென்காசி மாவட்டம் – முத்து கிருஷ்ணபேரி தும்பு மில்லில் திடீர் தீ விபத்து



தென்காசி மாவட்டம் வி.கே.புதூர் அருகே உள்ள முத்துகிருஷ்ணபேரியில் செயல்பட்டு வரும் தும்பு மில்லில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தீமளமளவென பரவியதை கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் தீயணைப்பு நிலையங்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், பொதுமக்கள் உதவியுடன் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் ஜேசிபி இயந்திரம் உதவியுடன் தீ பரவிய பகுதிகளை அகற்றி, சுமார் 3 மணி நேரபோராட்டத்திற்குபிறகு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டு குளத்திலேயே வாழ்ந்த சிறுவன் உதவிக்கரம் நீட்டிய ஆனந்த் அம்பானி

மேற்கு வங்காள மாநிலம் முர்ஷிதாபாத் மாவட்டம் பெல்டாங்கா பகுதியில் வசித்து வரும் இக்பால்(வயது 16) என்ற சிறுவனுக்கு ஏற்பட்டுள்ள மர்ம நோய் பாதிப்பால் கடந்த ஒரு மாதமாக, எப்போதும் தனது ஊரில் உள்ள குளத்தின் தண்ணீரிலேயே கழுத்து வரை மூழ்கியவாறு இருந்து வந்தார்.

உடல் பருமனான அவருக்கு தண்ணீரை விட்டு வெளியே வந்தால், உடல் முழுவதும் எரிச்சல்



ஏற்படுவதாக கூறப்படுகிறது. இதனால், குடும்பத்தினர் அழைத்தாலும் தண்ணீரை விட்டு வெளியே வர சிறுவன் மறுத்துவிட்டார். சிறுவன் இக்பாலை அவரது பெற்றோரு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோதும், அவருக்கு ஏற்பட்ட அரிய நோய் பாதிப்பு குறித்து டாக்டர்களால் முழுமையாக கண்டுபிடிக்க முடியவில்லை.

இருப்பினும் மருத்துவ செலவுக்கு அதிக பணம் தேவைப்பட்டதால், இக்பாலின் பெற்றோர் செய்வதறியாது திகைத்தனர். இதனிடையே, சிறுவன் இக்பால் குளத்தில் மூழ்கி இருந்தபடி உணவு சாப்பிடுவது, உறங்குவது உள்ளிட்ட காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவின. இந்த வீடியோ தொழிலதிபர் அம்பானியின் மகனும், ரிலையன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ஆனந்த் அம்பானியின் பார்வைக்கு சென்றுள்ளது.

இதையடுத்து உடனடியாக அவர், சிறுவன் இக்பாலின் குடும்பத்தினருக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்தார். இதன்படி இக்பால் மற்றும் அவரது குடும்பத்தினரை விமானம் மூலம் கொல்கத்தாவில் இருந்து மும்பைக்கு வரவழைத்து, அங்குள்ள ரிலையன்ஸ் அறக்கட்டளை மருத்துவமனையில் சிகிச்சை வழங்குவதற்கு ஆனந்த் அம்பானி ஏற்பாடு செய்தார். சிறுவன் இக்பாலுக்கு வழங்கப்படும் சிகிச்சைக்கான செலவுகள் அனைத்தையும் தானே ஏற்றுக்கொள்வதாக ஆனந்த் அம்பானி கூறியுள்ளார். இதன்படி அந்த சிறுவனுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின்கீழ் பள்ளி மாணவ, மாணவியர்கள் காலை உணவருந்துவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# குற்றாலத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமான பொறியாளர்கள் சங்க கூட்டமைப்பின் மாநில பொதுக்குழு கூட்டம்

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி



அனைத்து கட்டுமான பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் புருஷோத் தமன் தலைமை வகித்தார். மாநில செயலாளர் அருள் முன்னிலை வகித்தார். பொருளாளர் கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தின் போது பொறியாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடவும், பொறியாளர்களுக்கான அனைத்து உரிமைகள் கிடைத்திடவும், மாநில அரசு கவுன்சில் ஏற்படுத்தி அதில் மாநில கூட்டமைப்பின் நிர்வாகிகளையும் அக்குழுவில் உறுப்பினராக இணைத்து ஆணையிட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தலைவர் சண்முக செல்வன், செயலாளர் சிவகுருநாதன், பொருளாளர் சங்கர், முன்னாள் தலைவர்கள் மாரிமுத்து, காதர் பாட்ஷா, முத்து மாரியப்பன், முத்துக் குமார், மண்டல செயலாளர் தில்லை நடராஜன், உடனடி முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர்கள் மாரியப்பன், சங்கரநாராயணன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட சிவில் இன்ஜினியர்கள் சங்கங்களின் மாநில மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் பொறியாளர் தில்லை நடராஜன் நன்றி கூறினார்.

# சிவகங்கை அருகே 3,000 ஆண்டுகள் பழமையான கல்வட்டம், ஈமச் சின்னங்கள் கண்டுபிடிப்பு



சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் அருகில் உள்ள பிரவலூர் கிராமத்தில், பெருங்கற்காலத்தின் ஈமச்சின்னங்கள் மற்றும் கல்வட்டம் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரவலூர் கிராமத்தை சேர்ந்தவரும், அழகப்பா அரசுக் கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவருமான சரவணன் தனது நண்பர்களான அஜய், மதிச்செல்வம், செந்தூர், பாலசுப்பிரமணியன், மணி ஆகியோர், தங்கள் பகுதியில் உள்ள ஓடையில் பழங்கால கிடைத்துள்ளதாக தங்கள் கல்லூரியின் வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் வேலாயுத ராஜாவிடம் தெரிவித்தனர். பின்னர், பேராசிரியர் உள்பட அனைவரும் களஆய்வு மேற்கொண்டு பழங்கால பொருட்களை கண்டுபிடித்து காட்சிப் படுத்தி உள்ளனர்.

இதுகுறித்து முனைவ் வேலாயுத ராஜா கூறுகையில்,"பிரவலூர் கிராமத்தின் வடக்கே, கடம்பன்குடி கண்மாய்க்கு தெற்கே, பரந்து விரிந்த ஒரு மேட்டுப்பகுதியும், அதன் அருகில் வறண்ட நிலையில் ஒரு ஓடையும் காணப்படுகிறது.

அங்கு மேற்பரப்பில் ஏராளமான கல்வட்டங்களும், ஈமத்தாழிகளும் காணப்படுகின்றன. மண் அரிப்பு காரணமாக பெரும்பாலான ஈமத்தாழிகள் வெளியில் நன்கு தெரிகின்றன. அதிகமான கல்வட்டங்களும், இரண்டு குத்துக்கற்களும் காணப்படுகின்றன. அத்துடன் ஆங்காங்கே உடைந்த கருப்பு-சிவப்பு நிறப் பானை ஓடுகளும், இரும்புக் கசடுகளும், குவார்ட்ஸ் வகைக் கற்களும் காணப்படுகின்றன.

இவை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்களாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்களை, பெருங்கல் சின்னங்கள் என கூறுகிறார்கள்.

ஏனெனில், பெருங்கற்காலத்தில் மனித எலும்புச் சிதைவுகள் மற்றும் கல்லறைப் பொருட்கள் ஆகியவை பெரிய மண் பானைகளில் வைக்கப்பட்டு மூடியால் மூடப்படும். சில நேரங்களில் அதன் மேல் கல் மற்றும் கல் குவியல் வைப்பது வழக்கம். இவை கல்வட்டம் என்று அழைக்கப்படுகின்றன.

கல் திட்டை என்ற டால்மென், குழிஅடக்கம், பானை அடக்கம் எனப்படும் முதுமக்கள் தாழி, சர்கோபகஸ் என்ற ஈமப்பேழை, பாறை வெட்டுக் கல்லறை, குடைக்கல் மற்றும் தொப்பிக்கல், மென்ஹிர் என்ற குத்துக்கல், ஆந்த்ரோமார்பிக் எனப்படும் மனித உருவக் கற்சிலை, கல்வட்டம் மற்றும் கற்குவை எனப் பல வழிகளில் இறந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட ஈமச்சின்னங்கள் உள்ளன.

# ரேஷன் அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்துகின்றனர் அமைச்சர் செங்கோட்டையன் பேச்சால் சர்ச்சை

ரேஷன் அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்துகின்றனர் என்ற அமைச்சர் செங்கோட்டையனின் பேச்சால் சர்ச்சை எழுந்தது.

தமிழக சட்டசபையில் காலை 9.30 மணிக்கு இன்றைய அலுவல்கள் தொடங்கின. கூட்டம் தொடங்கியதும், நேரமில்லா நேரம் எடுத்து கொள்ளப்பட்டது. கேள்வி நேரம் எடுத்து கொள்ளப்படவில்லை.

இதனை தொடர்ந்து, சவுதி அரேபியாவில் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில் சட்டசபையில் அ.தி.மு.க. சார்பில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் இதுதொடர்பாக அவையில் பேசினர். இன்றைய நிகழ்வில், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, கூட்டுறவு ஆகிய



துறைகள் மீதான மானிய கோரிக்கைகள் விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இதன்படி அது தொடர்பான விவாதத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் வெங்கடரமணன் பேசினார்.

இதனை அடுத்து, தி.மு.க. எம்.எல்.ஏ. எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசும்போது, எங்களுடைய 5 ஆண்டுகளில் நெல் மூட்டைகள் நனையாமல் பாதுகாப்பாக குடோன்களில் வைத்தோம். நெல்லை பாதுகாத்தோம். நெல்லை நனையாமல், முளைக்க விடாமல், வெள்ளை நிறத்தில் அரிசி கிடைக்க வழி செய்தோம் என்றார்.

அமைச்சர் செங்கோட்டையன்

இதுபற்றி அமைச்சர் செங்கோட்டையன் பேசும்போது, ரேஷன் கடை அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்தி கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை என்றார். இதற்கு தி.மு.க. தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இதனை தொடர்ந்து, அமைச்சர் செங்கோட்டையன் பேசும்போது, நீங்கள் கூறினீர்கள். அதனால், கூறினேன். தமிழகத்தில் சன்ன ரக நெல் உற்பத்தி குறைவு. அண்டை மாநிலங்களில் இருந்து அவற்றை நாம் வாங்குகிறோம். தமிழகத்தில் சன்ன ரக நெல்லை உற்பத்திசெய்ய வேண்டும் என்பதற்காக, அதற்கான கூலியை முதல் - அமைச்சர் உயர்த்தி கொடுத்துள்ளார்.

தமிழகத்தில் இந்த ரக நெல் உற்பத்தி குறைவு. அதனை அதிகரிக்க முதல்-அமைச்சர் கூறியுள்ளார் என்றார். ரேஷன் கடை அரிசியை சிலர் பயன்படுத்துவதில்லை என்பதே உண்மை என கூறி முடித்து கொண்டார்.

# டெல்லி பேரணிக்கு செல்ல சிறப்பு ரெயிலுக்கு அனுமதி மறுப்பு; இந்திய கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை: டெல்லி பேரணிக்கு செல்ல சிறப்பு ரயிலுக்கு அனுமதி மறுத்த மத்திய அரசை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஆக.21 (நாளை) டெல்டா மாவட்டங்களில் நடைபெறுகிறது.



இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய பாஜக அரசு தொழிலாளர், விவசாயிகள் விரோத கொள்கைகளை தீவிரமாகசெயல்படுத்தி வருகிறது. தலித்துகள், பழங்குடியின மக்கள் சிறுபான்மையிருக்கு எதிராக செயல்படுகிறது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியாமல் படுதோல்வி அடைந்துள்ளது.

வேலையில்லா திண்டாட்டம் வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது. சட்டபூர்வ வேலை பெறும் உரிமை அளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, விபிஜி ராம் ஜி என்ற திட்டத்தை கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் சட்டபூர்வ வேலை பெறும் உரிமை மறுக்கப்பட்டு, அரசின் விருப்பம் சார்ந்ததாக மாற்றப்படுகிறது. மாநில அரசுகளின் மீது நிதிச் சுமையும் ஏற்றப்படுகிறது.

இது ஏழை, எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கிட வேண்டும் என்பதிலிருந்து அரசு விலகிக் கொள்ளும் வஞ்சகச் செயலாகும். நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் சமத்துவக் கோட்பாடுகள், சமூக நீதி மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கு எதிராக மத்திய பாஜக அரசு செயல்படுகிறது.

மத்திய அரசின் இத்தகைய போக்கை கண்டித்தும், கொள்கை மாற்றம் அவசியம் என்பதை வலியுறுத்தியும்,

அந்த வகையில் கேரளாவில் இருந்து ஒரு சிறப்பு ரயிலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப் போலவே காவிரி டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகை, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து டெல்லி செல்ல தனி சிறப்பு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக ரயில்வே நிர்வாகமும் அதன் விதிமுறைகளை அனுசரித்து முன் பணமும் பெற்றுக் கொண்டு, தனி சிறப்பு ரயில் ஒதுக்கீடு செய்ய முதல் கட்ட ஒப்புதல் வழங்கியது.

இந்நிலையில் நேற்றைய தினம் திடீரென அந்த முன்பணத்தை ரயில்வே நிர்வாகம் திருப்பி அளித்துள்ளது. சிறப்பு ரயிலுக்கு அனுமதி வழங்கவில்லை என தெரிவித்துள்ளது. சங் பரிவார் அமைப்புகள் நடத்தக்கூடிய இயக்கங்களுக்கும், விழாக்களுக்கும் சிறப்பு ரயில்களை இயக்கி வருகின்ற இந்திய ரயில்வே துறை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தக்கூடிய, உழைக்கும் மக்கள் பங்கேற்கக்கூடிய இயக்கத்திற்கு சிறப்பு ரயிலை வழங்க மறுத்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி கண்டிக்கிறது. மத்திய பாஜக அரசின் இந்த ஜனநாயக விரோதப் போக்கை கண்டித்து, டெல்டா மாவட்டங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (ஆக.21) நடைபெறும். இதில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள், உழைக்கும் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வர். இந்திய ரயில்வே நிர்வாகம் தனது நிலையை மறுபரிசீனை செய்து, சிறப்பு தனி ரயில் இயக்க மறுத்தால் திருச்சி மண்டலத்தில் தொடர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலையை உருவாக்கும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துக்கொள்கிறது.

# தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 12 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை - மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி வழங்கினார்

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் எம். பி. ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மாணவ, மாணவிகளின் கல்விக்கு உதவும் வகையில் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள 3 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த ஏழை, எளிய மக்கள் தங்களது குழந்தைகளின் கல்விக்காக உதவித்தொகை வழங்குமாறு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி கதிர்வேலிடம் கோரிக்கை விடுத்து மனு அளித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அவர்களின் கோரிக்கையை பரிசீலித்த தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி கதிர்வேல், தனது தாய், தந்தையர் பெயரில் செயல்பட்டு வரும் விஜயலட்சுமி கதிர்வேல் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்தார்.

அதன்படி, 3 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 12 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையை மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி கதிர்வேல் வழங்கினார்.

ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் காங்கிரஸ் நிர்வாகத்திற்கும், கல்வி உதவித்தொகை வழங்கிய பெருமாள்சாமி கதிர்வேலுக்கும் மாணவர்களின் பெற்றோர் நன்றி தெரிவித்தனர்.

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில செயலாளர் மற்றும் தமிழக வெற்றிக் கழக பிரமுகர் ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள அறிக்கை:

தமிழ்நாடு சட்டப்பேரவையில், தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தொய்வின்றி எந்த சிரமமும் இன்றி பொது மக்கள் சார்ந்த பணிகளில் ஈடுபட வசதிக்காக கார் மற்றும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் போன்றோருக்கான அனைத்து செலவுகளையும் தமிழக அரசே ஏற்று வழங்கும் என்று



அறிவித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மக்கள் பணியை சிறப்பாக செய்யும் விதமாக சட்டமன்ற உறுப்பினர்களின் நலனை கருத்தில் கொண்டு,

அவர்களுக்கு உரிய மரியாதையையும் வசதிகளையும் வழங்கிட முடிவு செய்து சட்ட பேரவையில் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் இந்த அறிவிப்பு வரலாற்று சிறப்புமிக்கதாகும்.

மக்களுக்கான அரசாக, மக்கள் பிரதிநிதிகளின் உழைப்பை மதித்து செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமை தமிழகம் பெற்ற பெரும் பேறாகும்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் 100 நாள்களை கடந்து நல்லாட்சியின் சாதனைகள் மூலமாக மக்களுக்கான நல்ல பல திட்டங்களை தீட்டி செயல் படுத்தி வரும் தமிழக வெற்றிக் கழக ஆட்சி இன்னும் 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப்விஜய் அவர்கள் தலைமையில் நல்ஆட்சி அமைத்து நடக்கும் அதன் மூலம் தமிழகம் தொடர்ந்து வளரட்டும்.

# பனைமரம், பனை விதை, பனை பண்ணை, மற்றும் பனைமரக்கன்றுகள் உற்பத்தி செய்து

## கிராம ஊராட்சிகளுக்கு இலவசமாக வழங்க பூமி தான இடங்கள், அரசு புறம்போக்கு இடங்களை வழங்க கோரி கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு



தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளராக மாரியப்பன் இருந்து வருகின்றார். இவரது தலைமையில், கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமாரை சந்தித்து கோரிக்கை மனு ஒன்று வழங்கப்பட்டது.. அந்த மனதில் தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர்கள் நல வாரிய சங்கம் மாநில அளவில் பதிவு செய்யப்பட்டு கோவை மாவட்டத்தை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த சங்கத்தின் சார்பாக பனைமரம் வளர்ப்பது, அதன் பயன்களை மக்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி வருகிறோம். அரசு பதிவு பெற்ற சங்கமாகஇந்தசங்கம்இருந்து வருகின்றது. தமிழ்நாட்டின் தேசிய மரமான பனை மரத்தை கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் நடுவதற்குவிழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தது 1500 மரக்கன்றுகள் தேவை என்பதை உணர்ந்துள்ளோம். நாங்கள் அனைத்துகிராமஊராட்சிகளுக்கும் தலா, 1500 பனை விதைகள் விநியோகம் செய்வதற்கு தயாராக உள்ளோம் எனவும்,இவ்வாறு செய்வதால், அழிந்து போன பனைமரம் மீண்டும் உயிர் பெறுவதற்கு அதிகமான வாய்ப்பு உள்ளது. அரசின் உதவியுடன் இலவசமாக மரக்கன்றுகளை வளர்த்து, கிராம ஊராட்சிகளில் நடவு செய்ய முடியும், ஆனால் இத்தனை பனை மரங்களை வளர்ப்பதற்கு தங்களிடம் போதுமான இட வசதி இல்லை எனவே, அரசிடம் உள்ள பூமிதான இடங்கள் மற்றும் பொறம்போக்கு இடங்களை கணக்கிட்டு எங்களுக்கு அதனை தெரியப்படுத்தி அந்த இடங்களில் பனை மரங்களை வளர்க்கஅரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாள் சத்பாவனா திவாஸ் எனும் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு





பாரத ரத்னா, முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் 82-வது பிறந்தநாளைமுன்னிட்டு சத்பாவனா திவாஸ் எனும் மத நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சி நேற்று [20.08.2026] ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட தலைவர் ஈ.ஆர். ராஜேந்திரன் தலைமையில் ராஜீவ் காந்தியின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர்ம.முகமது அர்சத் மத நல்லிணக்க உறுதிமொழியை வாசிக்க, அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்வில் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம். ஞானதீபம், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர்கள் இரா. கனகராஜன், டெக்ஸ் அன்பழகன், வழக்கறிஞர் ஜெய்ஹிந்த் எஸ்.யுவராஜ்,ராஜாஜிபுரம் சிவா, வட்டார துணைத்தலைவர் நசியனூர் என்.பி. சுப்பிரமணியம், சென்னிமலை கிழக்கு வட்டாரதலைவர் எஸ். இளங்கோவன், மாவட்ட நிர்வாகிகள் கே. தெய்வசிகாமணி, ஏ. நூருதீன், மாவட்ட நெசவாளர் அணி பொதுச்செயலாளர் ஸ்வீட் கனகராஜன், மண்டல தலைவர் எம்.வி. விஜயராகவன்,பிராமணபெரிய அக்ரஹாரம் வாட்டர் சிவாஜி, சூரம்பட்டி வார்டு தலைவர் விஜயகுமார், கனி ராவுத்தர் குளம் என். சபீர் அகமது, NCWC மாவட்ட துணைத் தலைவி ஆர்.செல்வி ரவி, மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் ஆர்.புவனேஸ்வரி, டி. ஜானகி, எஸ். சித்ரா தேவி, எஸ். ஸ்ரீவித்யா உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# Jharkhand high court stays govt notification cancelling appointments from 11th, 13th JPSC exam



*Jharkhand high court on Thursday stayed operation of notifications cancelling appointments of government employees hired through 11th to 13th Jharkhand Public Service Commission (JPSC) exams, reported PTI news agency. The state government had cancelled 22 examinations based on findings of the ongoing Crime Investigation Department (CID) probe into alleged irregularities in JPSC and the Jharkhand Staff Selection Commission (JSSC). The state's personnel department late on Tuesday issued a notification in this regard following a special Cabinet meeting on Monday, postponing six examinations and bringing 17 others conducted since 2014 under the scope of investigation.*

*The decision came amid ongoing student protests against alleged irregularities in the recruitment exams. Over 2,600 people who have joined the service are also set to lose their jobs, people aware of the development said.*

*Candidates who recently secured government jobs through recruitment tests in Jharkhand staged a protest on Thursday, demanding the withdrawal of notifications cancelling 22 exams and ordering probes into other exams over alleged irregularities, PTI reported.*

*Some of the protesters also filed petitions before the Jharkhand high court challenging the government's decision.*

*The protesters said they were not opposed to an investigation into alleged irregularities but objected to the cancellation of the entire examinations.*

*They argued that action should instead be taken against candidates found to be involved in irregularities, rather than those selected on merit.*



ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே செட்டிதோட்டம்புதூர் அண்ணமார் சுவாமி கோவில் பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக, கோவில் பூசாரி 7 அடி நீளமுள்ள இரண்டு அரிவாள்கள் மீது நின்றவாறு பக்தர்களுக்கு அருள்வாக்கு கூறினார். தொடர்ந்து, விழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அசைவ அன்னதான விருந்து வழங்கப்பட்டது.



உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் சீலம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (20.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்..



"உங்களைத்தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் பேருந்தில் பயணிகளுக்கு வழங்கப்பட்ட பயணச்சீட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 19.08.2026 அன்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



"உங்களைத்தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், பெருந்துறை, துடுப்பதி ஊராட்சி, சாணார்பாளையம் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின்கீழ் குப்பைகள் சேகரிக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (20.08.2026) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.